முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு அமைப்பின்கீழ் பதிவுசெய்யப் பட்டுள்ள சங்கங்களாக இருந்தால் அவ்வாறு பதிவு செய்யப்பட்ட சங்கங்களில் இருக்கிற ஆடைகளை கோவாப்டெக்ஸ் மூலமாக கொள்முதல் செய்து தக்க லாபத்தை ஈட்டித் தரும் வகையில் அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 248, திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

248—

ஜீவ நதிகளிலிருந்து விவசாயத்திற்குத் தண்ணீர்

*2104 திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜீவ நதிகளில் இருந்து பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திற்கு விவசாயத்திற்காக தண்ணீர் விட ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இத்தகைய திட்டம் அரசின் பரிசீலனையில இல்லை.

திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்தாண்டுகளுக்கு ஒரு முறைதான் எங்கள் மாவட்டத்திலே மழை பெய்கிறது, தஞ்சை மாவட்டத்தைப் போல் எங்கள் பகுதியும் நிச்சயமாக விவசாயம் செய்ய வேண்டுமென்றால் ஒரு ஜீவ நதியிலிருந்து எங்கள் மாவட்டத்திற்கு தண்ணீர் கொண்டுவந்தால்தான, நாங்கள் விவசாயம் செய்யமுடியும் என்ற நிலை இருக்கிறது. இதை அந்தப் பகுதி மக்கள் இந்தக் காலக் கட்டத்திலே நிச்சயமாக செய்வீர்கள் என்று நம்புகிறார்கள், அதை இந்த அரசு செய்து தருமா என்று அறிய விரும்புகிறேன்.

1992 மார்ச் 17]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் உள்ள நிலங்களுக்கு வைகையாற்றின் மூலமாகவே சில பகுதிகளுக்கு பாசனம் அளிக்கப்படுகிறது, இப் பாசனத்தின் அளவு இருக்கிற தண்ணீரின் அளவைப் பொறுத்து பாசன விதிகளை ஒழுங்குபடுத்தி அங்கே தண்ணீரை வழங்கிக் கொண்டு இருக்கிறோம், ஜீவ நதியிலிருந்து பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திற்கு தண்ணீர் கொண்டு வருவதற்கு சாத்தியக் கூறுகளான திட்டங்கள் தறபோது அரசிடத்திலே இல்லை. இருந்தாலும் மேற்கு நோக்கி பாய்கின்ற ஆறுகளை கிழக்கே திருப்பி விடுவதற்காக ஒரு திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிற காரணத்தாலே அந்த முயற்சியின் நடவடிக்கைகள் வெற்றி பெறுகிற நேரத்திலே, அந்தப் பகுதிகளுக்கு பாசனம் தந்து மேம்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவிலே அவர்களுக்கு போக மீதித் தண்ணீர் வீணாகக் கடலிலே கலக்கின்றது, அதை நமது தமிழகத்திற்குக் கொண்டுவருவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு இருப்பதாக கூறினார்கள், அதைப்போன்ற ஒரு பெரிய திட்டமான கங்கையையும் காவிரியையும் இணைத்தால் நிச்சயமாக அந்த வறட்சி பகுதிகள் செழுமை பகுதிகளாக மாறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது, அதற்கான திட்டத்தை இந்த அரசு முனைப்புடன் செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : இது சம்பந்தமாக சென்ற மானியக் கோரிக்கையில் விளக்கமாகப் பதில் சொல்லியிருக்கிறேன். கங்கை-காவிரி இணைப்புத் திட்டத்தைப்பற்றி மத்திய அரசுதான் முடிவு எடுக்க வேண்டும். நம்முடைய அரசு இந்தத் திட்டத்தைப் பொறுத்தமட்டிலே நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் பல்வேறு முயற்சிகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம், ஆகவே இது சம்பந்தமாக மைய அரசு நல்ல முடிவு எடுக்குமானால், மாநில அரசு இதைச் செயல்படுத்துவதற்குத் தமிழ்நாட்டிலே செயல்படுத்துவதற்கு, நம்முடைய பகுதிகளிலே செயல்படுத்துவதற்கு, முழுமையான நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 249. திரு. ஆர். டி. அரங்கநாதன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.